**<u>சார்பு நீதிமன்றம், அவிநாசி</u>**

**<u>OS – 200/2021</u>**

நாள் 09.09.2025

DW2 – சரவணன்

த/பெ – சாமிநாதன்

**Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of September 2025)**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் மற்றும் பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட விபரம் வாதிகளுக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் ஏற்பட்ட போது எனக்கு சுமார் 18 வயதாகி இருந்தது. பி.வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட சொத்துக்களைப் பொறுத்து எனது அப்பா வாதிகளிடமிருந்து விடுதலை ஆவணம் வா.சா.ஆ.7–ஐ எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.7 விடுதலை ஆவணத்தில் சொத்து பிதுரார்ஜித வகையில் பாத்தியப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஆனால், பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் கண்ட சொத்தைப் பொறுத்து வாதிகளிடமிருந்து எந்தவொரு பாக பாத்திய விடுதலை ஆவணமும் எனது அப்பா எழுதி வாங்கவில்லை என்றால் சரிதான். எனது அப்பா அவருக்கு பி.வா.சா.ஆ.1 உயில் சாசனம் மூலம் வந்த சொத்தை தான் எனது பெயருக்கு பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தை எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தில் எனது அப்பா அவருடைய குடும்ப உறுப்பினர்கள் பற்றிய விபரத்தை குறிப்பிட்டு சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

2. எனது பாட்டி 4–ம் பிரதிவாதி சின்ன ராமாக்காள் (எ) ராமாத்தாள் எப்போது இறந்து போனார் என்றால் 2022–ம் ஆண்டில் இறந்து போனார். எனது அப்பா பெயரில் உள்ள பி.வா.சா.ஆ.1 உயில் சாசனத்தில் கண்ட சொத்தை 4–ம் பிரதிவாதி சின்ன ராமாக்காள் (எ) ராமாத்தாள் அவர் ஆயுள் வரை அனுபவித்து வந்து அவருடைய ஆயுளுக்கு பிறகு எனது அப்பாவிற்கு சொத்து சேர வேண்டியது என்று கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனால், எனது பாட்டி 4–ம் பிரதிவாதி உயிரோடு இருக்கும் காலத்திலேயே எனது அப்பா பி.வா.சா.ஆ.1–ல் கண்ட சொத்தை எனது பெயருக்கு பி.வா.சா.ஆ.4 உயில் சாசனத்தை எழுதி வைத்தது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் இந்த வழக்கில் சர்வே எண்.351/3C, 351/3B, 351/3O சொத்துக்களை 9,10,11–ம் அயிட்ட சொத்துக்களாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரிதான். அந்த 3 அயிட்ட சொத்துக்களுக்கும் வாதிகளின் பெயரும் கூட்டுப்பட்டாதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சாட்சி ஒப்புக்கொண்டதின் பேரில் **சர்வே எண்.351/3B–ன் பட்டா எண்.2544 கணினி பட்டா நகல் வா.சா.ஆ.16** ஆகவும், **சர்வே எண்.351/1C–ன் பட்டா எண்.2086–ன் கணினி பட்டா நகல் வா.சா.ஆ.17** ஆகவும், **சர்வே எண்.351/3O–ன் பட்டா எண்.986–ன் கணினி பட்டா நகல் வா.சா.ஆ.18** ஆகவும் குறியீடு செய்யப்பட்டது. பி.வா.சா.ஆ.1 உயில் சாசனமானது எனது பாட்டியான 4–ம் பிரதிவாதி ஆயுளுக்கு பிறகு எனது அப்பாவிற்கு சொத்துக்கள் போக வேண்டும் என்று வாசகம் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது பாட்டி 4–ம் பிரதிவாதி எனது அத்தை 1–ம் பிரதிவாதி கலாமணி வீட்டில் வைத்து தான் இறந்து போனார் என்றால் சரிதான். எனது பாட்டியை நானும், எனது அம்மாவும் சரிவர பராமரிக்காததால் தான், எனது

பாட்டி வருவாய் கோட்டாச்சியரிடம் பராமரிப்பு தொகை கேட்டு மனு கொடுத்திருந்தார் என்றால், எனது பாட்டி, எனது சின்ன மாமா இறப்பிற்காக சென்றவர் அங்கிருந்து சென்று வருவாய் கோட்டாச்சியரிடம் மனு கொடுத்து விட்டார். நான் சொல்வது பொய் என்றும் இந்த வழக்கிற்காக வேண்டி தான் மேற்படி சங்கதியை பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் இல்லை என்று தான் எங்களது தரப்பில் எதிர்வாதமாக தெரிவித்து வழக்காடி வந்துள்ள நிலையில் வாதிகள் பெயரை வா.சா.ஆ.16, வா.சா.ஆ.17, வா.சா.ஆ.18 கூட்டுப்பட்டாவில் நீக்க வேண்டி நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் வாதிகளுக்கு பாகம் இருப்பதால் தான் அவர்களுடைய பெயரை பட்டாவில் இருந்து நீக்க நாங்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தில் பாகம் கேட்டு எங்களுக்கு பி.வா.சா.ஆ.5 சட்ட அறிவிப்பை வாதிகள் அனுப்பிய பிறகு தான் வா.சா.ஆ.7 பாக பாத்திய விடுதலை ஆவணத்தை வாதிகளிடமிருந்து எனது அப்பா எழுதி வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அதற்கு பிறகு வாதிகளும், நானும், எனது அப்பாவும் வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் மூலம் வசந்தி என்பவருக்கு சர்வே எண்.348/1L 91 சென்ட் சொத்தை கிரையம் கொடுத்தோம் என்றால் சரிதான். அதனால், வாதிகளுக்கு தாவா சொத்தில் சட்டப்படி பாக பாத்திய உரிமை உண்டு என்று சொன்னால் இல்லை. அதனால் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :–** **இல்லை**

**Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.**

C SENTHIL KUMAR
Digitally signed by C SENTHIL KUMAR
Date: 2025.09.09 15:59:44 -0100

**Subordinate Judge,**
**Avinashi.**